ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 2 | டிசம்பர் 1996 | கானம் : 5

ஸ்ரீ ஹரி:

## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 2 டிசம்பர் 1996 கானம் : 5

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 13 | 5 |
| 3. | ஸ்ரீ வேங்கடேச ப்ரபத்தி - 2 | 7 |
| 4. | தொண்டரடிப்பொடி ஆழ்வார் வைபவம் | 9 |
| 5. | ஜடாயு மோக்ஷம் | 15 |
| 6. | ஸ்ரீ குருஜியிடம், பக்தர்கள் அவ்வப்பொழுது கேட்ட கேள்விகளும், அதற்கு ஸ்ரீ குருஜி அளித்த பதில்களும் - தொடர்ச்சி | 23 |
| 7. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து-16 | 28 |
| 8. | செய்திகள் | 31 |
| 9. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |


This issue photos : Sri R. Kalyanakrishnan



மூன்றாவது ப்ரம்மோத்ஸவ வைபவத்தில், ராதா கல்யாணத்தன்று செதலபதி
ஸ்ரீ சௌந்தரராஜ பாகவதர் குழுவினரின் அஷ்டபதி பஜனை.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

ராகம் : வஸந்தா தாளம் : ஆதி

பல்லவி

*நமஸ்கரோமி ஸத்குரு தேவம் (நமஸ்கரோமி)*

அனு பல்லவி

*நரலோக பந்தும் நாராயணம்*
*லீலயா த்ருத மானுஷ வேஷம் (நமஸ்கரோமி)*

சரணம்

*பக்த சித்தாகர்ஷண ஸுந்தர வதனம்*
*பக்த சரித்ர குதூஹலேன வர்ஷிதம்*
*பதித ஜன உத்தாரண தீரம்*
*பரம க்ருபாநிதிம் முரளீதர ஸேவிதம் (நமஸ்கரோமி)*

---

அறிவிப்பு : *'ஸ்ரீ குருஜியின் கீர்த்தனங்கள்'* அடங்கிய காஸெட்டுகள் இரண்டு பாகங்கள் வெளிவந்துள்ளன. இரண்டு பாகங்களின் விலை ரூ.60/-

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-**

எஸ். பாலகிருஷ்ணன், ✆ PP. 4896264
36/14, D.S. அபார்ட்மெண்ட்ஸ்,
பிள்ளையார் கோயில் தெரு,
ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.



# மதுரமான 13 மஹனீயர்

ஸ்ரீ G.B. ஸ்ரீநிவாஸமூர்த்தி என்பவர், ஸ்ரீ குருஜியிடம் மிகவும் பக்தி உள்ளவர். ஸ்ரீ குருஜியைத் தவிர வேறு எந்த மஹாத்மாவையும், தன்னுடைய இடத்திற்கு வந்தால் கூட, சென்று போய் சேவிக்க மாட்டார். அவருடைய தாயார், சகோதரி இவர்களும் ஸ்ரீ குருஜியிடம் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். ஸ்ரீநிவாஸமூர்த்தி, தன்னுடைய B.E. படிப்பை முடித்து விட்டு, நல்ல வேலை கிடைத்தால் சேர்ந்து விடலாம் என்று முயற்சி செய்து கொண்டிருந்தார். வேலை கிடைக்கும் வரை ஸ்ரீ குருஜியிடம் இருந்து கைங்கர்யம் செய்யலாம் என்று உத்தேசித்து, அவர் ஸ்ரீ குருஜியுடனே இருப்பார். காலை முதல் மாலை வரை, ஸ்ரீ குருஜி எந்த வேலையைச் செய்யச் சொன்னாலும், முக மலர்ச்சியுடன் செய்து கொண்டு, ஒரு க்ஷணம் கூட ஸ்ரீ குருஜியை விட்டுப் பிரியாமல் கைங்கர்யம் செய்வார். முதல் வருஷ கோகுலாஷ்டமி ப்ரம்மோத்ஸவத்தில், மிகவும் சிரத்தையுடன் அபாரமாக, அயராமல் கைங்கர்யம் செய்தார்.

உலகத்தில் எல்லாரும் எதற்காகவோ ஏங்குவார்கள். ஆனால், ஸ்ரீ குருஜியோ அன்பிற்காக ஏங்குபவர். அவர் ஒரு அன்புப் பிரியர். தன் மீது யாராவது சிறிது அன்பு செலுத்தி விட்டாலும் போதும், ஸ்ரீ குருஜி மயங்கியே விடுவார். அன்புதான் க்ருஷ்ண பக்திக்கு ஆதாரம் என்று அடிக்கடி கூறுவார்.

ஒரு சமயம், காஞ்சி ஸ்ரீமடத்தில், ஸ்ரீ மஹா பெரியவாளுடன் குருஜி விடியற்காலையில் 2 முதல் 5 மணி வரை பேசிக் கொண்டிருந்தார். தரிசனம் முடிந்து ஸ்ரீ குருஜி கிளம்புவதற்கு முன், மறுபடியும் ஸ்ரீ பெரியவாளிடம் சென்று, தனக்கென்று ப்ரத்யேகமாக உபதேசம் அருள வேண்டும் என்று கேட்க, ஸ்ரீ பெரியவாளும் சிரித்துக் கொண்டே

*"எல்லோரிடமும் அன்பாக நடந்து கொள்,*
*என்னை திட்டுபவர்களிடத்தில் கூட,*
*நீ அன்பாக நடந்து கொள்ள வேண்டும்!"*

என்று கூறியருளினார்.

ஸ்ரீநிவாஸமூர்த்தி, ஸ்ரீ குருஜியின்பால் தீராத அன்பு கொண்டதால், ஸ்ரீ குருஜியும் அவரிடம் மிகவும் அன்புடன் இருப்பார். ஒருநாள், ஸ்ரீ குருஜி அவரைப்பார்த்து, "M.S. படிக்க, I.I.T. Entrance Exam எழுது" என்று சொன்னார். அதற்கு அவர், அதெல்லாம் எனக்குக் கிடைக்காது குருஜி, அது மிகவும் கஷ்டம் என்றார். அதற்கு ஸ்ரீ குருஜியோ, "நீ இந்த முறை அவசியம் எழுதுகிறாய், நான் சொல்கிறேன், நீ எழுது" என்று சொன்னார். அவரும், ஸ்ரீ குருஜி சொல்கிறாரே என்று Entrance Exam எழுதினார். Result வரும் சமயத்தில், மிகவும் சாதாரணமாக, நம்பிக்கையே இல்லாமல் பார்க்கச் சென்றார்.

Result-ஐ பார்த்தவுடன், அவராலேயே நம்ப முடியவில்லை. மிகவும் அதிக மதிப்பெண்கள் எடுத்து தேர்ச்சி பெற்றிருந்தார். சென்னை I.I.T. யிலேயே அவருக்குப் படிக்க இடமும் கிடைத்தது.

அவர் படிப்பு முடிக்கும் தருவாயில், ஒரு Project Work செய்ய வேண்டியிருந்தது. அந்த Project Work-ல் ஒரு சிக்கலான ப்ரச்னை வந்தது. அவருடைய ஆசிரியர்கள் முதல், எத்தனையோ பேர் முயன்றும் அந்த ப்ரச்னைக்கு தீர்வு காண முடியவில்லை. ஸ்ரீநிவாஸமூர்த்தி குருஜியிடம் வந்து ப்ரச்னையைக் கூறினார்.

ஸ்ரீ குருஜி, அவரைத் தன் அருகாமையில் அழைத்து உட்கார வைத்து, "என்ன Problem" என்று இரண்டு முறை விசாரித்தார். பிறகு அவரை அனுப்பிவிட்டார்.

மாதக் கணக்கில் யாராலும் தீர்க்க முடியாதபடி இருந்த ப்ரச்னை, ஸ்ரீ குருஜி விசாரித்த மறுநாள் காலையிலேயே சரியாகிவிட்டது. ஸ்ரீநிவாஸமூர்த்திக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்.

# ஸ்ரீ வேங்கடேச ப்ரபத்தி - 2

*விஷ்ணோ: பதே பரம இத்யுதிதப்ரசம்ஸௌ*
*யௌ மத்வ உத்ஸ இதி போக்யதயாப்யுபாத்தௌ ।*
*பூயஸ்ததேதி தவ பாணிதலப்ரதிஷ்டௌ*
*ஸ்ரீ வேங்கடேச சரணௌ சரணம் ப்ரபத்யே ॥* 10

எம்பெருமானின் திருவடிகளின் பெருமை, உபநிஷத்துக்களில் கூறப்படுகிறது. பரமபதம் சென்றவர்கள், அங்கும், அத்திருவடிகளுக்குக் கைங்கர்யம் செய்தே பேரின்பம் பெறுகின்றனர். ஆதலின், இம்மையிலும் மறுமையிலும் அத்திருவடிகளே நமக்குக் கதி என்று ஸ்ரீநிவாசன், தனது வலது திருக்கையால் காண்பிக்கின்றான்.

*பார்த்தாய தத்ஸத்ருச ஸாரதிநா த்வயைவ*
*யௌ தர்சிதௌ ஸ்வசரணௌ சரணம் வ்ரஜேதி ।*
*பூயோபி மஹ்யமிஹதௌ கரதர்சிதௌ தே*
*ஸ்ரீ வேங்கடேச சரணௌ சரணம் ப்ரபத்யே ॥* 11

கண்ணன் அர்ஜுனனுக்கு ''மாம் ஏகம் சரணம் வ்ரஜ:'' என்று கீதையில் உபதேசித்துள்ளான். 'என்னை சரணம் அடை' என்றே, பொருள் வெளிப்படையில் தோன்றும். உண்மையில், ''என் திருவடிகளைச் சரணம் அடை'' என்றே அவ்வாக்கியத்திற்குப் பொருள். கண்ணனும், ஸ்ரீநிவாஸனும் ஒருவனேதான். அர்ஜுனனுக்குக் கீதையில் உபதேசித்தப் பொருளையே, இத்திருமலையில் திருவேங்கடவனாய் நின்று, தன் வலது திருக்கையால் காண்பிக்கின்றான்.

*மந்மூர்த்நி காலியபணே விகடாடவீஷு*
*ஸ்ரீ வேங்கடாத்ரிசிகரே சிரஸி ச்ருதிநாம் ।*
*சித்தேப்யநந்யமநஸாம் ஸமமாஹிதௌ தே*
*ஸ்ரீ வேங்கடேச சரணௌ சரணம் ப்ரபத்யே ॥* 12

இராமனாகவும், கிருஷ்ணனாகவும் அவதரித்தவன் இத் திருவேங்கடமுடையானே. வேதங்களில் கூறப்பெறும் பரம்பொருளும் இத் திருவேங்கடமுடையானே. பரம்பொருள் என்று பெரியவர்களும் தீர்மானம் செய்து, தங்கள் மனத்தில் நிலைபெற நிறுத்தி தியானிக் கின்றனர். நாமும் அவனைத் தொழுது உய்வோமாக.

*அம்லாந ஹ்ருஷ்யதவநீதல கீர்ண புஷ்பௌ*
*ஸ்ரீ வேங்கடாத்ரி சிகராபரணாயமாநௌ ।*
*ஆநந்திதாகில மநோ நயநௌ தவைதௌ*
*ஸ்ரீ வேங்கடேச சரணௌ சரணம் ப்ரபத்யே ॥* 13

தேவர்களும், பிறரும் எண்ணிறந்த மலர்களை இறைவன் திருவடிகளில் சேர்க்கின்றனர். அங்கு இடம் பெறாது, அம்மலர்கள் தரையில் இறைகின்றன. இறைவன் இணையடி சம்பந்தம் பெற்றமையால் அம்மலர்கள் வாடுவதில்லை. மலர்ந்து விளங்குகின்றன. இறைவன் திருவடிகள், மலைக்கு ஒப்பற்ற அணிகளாய் விளங்குகின்றன. பக்தர்கள் அனைவரும் கண் குளிரக் கண்டு மனமாரக் களிக்கின்றனர்.

*ப்ராய: ப்ரபந்ந ஜநதா ப்ரதமாவகாஹ்யௌ*
*மாது: ஸ்தநாவிவ சிசோ ரம்ருதாயமாநௌ ।*
*ப்ராப்தௌ பரஸ்பர துலா மதுலாந்தரௌ தே*
*ஸ்ரீ வேங்கடேச சரணௌ சரணம் ப்ரபத்யே ॥* 14

இறைவன் திருவடிகள், தங்களுக்கு தாம் இணையாகுமேயன்றி வேறு இணையில்லாதவை. தாயின் பாலைப் பெற்ற குழந்தைபோல், பக்தர்கள் இவ்விணையடிகளைப் பெற்று மகிழ்கின்றனர். ஆதலின், எவரும் திருவடிகளுக்குத் தொண்டு புரிவதையே முதலில் விரும்பு கின்றனர்.

*ஸத்வோத்தரைஸ் ஸதத ஸேவ்ய பதாம்புஜேந*
*ஸம்ஸார தாரக தயார்த்ர த்ருகஞ்சலேந ।*
*ஸௌம்யோபயந்த்ருமுநிநா மம தர்சிதௌ தே*
*ஸ்ரீ வேங்கடேச சரணௌ சரணம் ப்ரபத்யே ॥* 15

பெரியவர்களால் வணங்கத்தக்கவரும், கருணைக்கடலுமாகிய ஸ்ரீ மணவாள மாமுனிகளால், உன் திருவடிகளே உலகோர்க்கு உற்ற துணை என்பதை நான் அறியப் பெற்றேன்.

*ஸ்ரீச ச்ரியா கடிகயா த்வதுபாயபாவே*
*ப்ராப்யே த்வயி ஸ்வயமுபேயதயா ஸ்புரந்த்யா ।*
*நித்யாச்ரிதாய நிரவத்யகுணாய துப்யம்*
*ஸ்யாம் கிங்கரோ வ்ருஷகிரீச ந ஜாது மஹ்யம் ॥* 16

நாம் இறைவன் திருவருளுக்குப் பாத்திரம் ஆகும்படி செய்பவள் திருமகள். பிறவிக் கடலைக் கடப்பதற்குக் காரணமாயிருப்பவன் திருமால். பரமபதம் அடைந்த பிறகு, நாம் அத்திவ்ய தம்பதிகளுக்குத் தொண்டு செய்து மகிழ்கிறோம். நாம் எப்பொழுதும் பரம புருஷனுக்கு அடிமை; சுதந்திரர்களல்லோம்.

# தொண்டரடிப்பொடி ஆழ்வார் வைபவம்

தொண்டரடிப்பொடி ஆழ்வார், சோழ நாட்டில், திருமங்கையாழ்வாருடைய மங்களாசாஸனம் பெற்ற 'புள்ளம் பூதங்குடி' என்னும் திவ்ய தேசத்தின் அருகிலுள்ள, *'திருமண்டங்குடி'* என்னும் திருப்பதியில் கலியுகத்தில், இருநூற்று எண்பத்து ஒன்பதாவதான (289) பிரபவ ஸம்வத்ஸரத்தில், மார்கழி மாதத்தில், கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசி கூடின செவ்வாய்க்கிழமையில், கேட்டை நக்ஷத்திரத்தில், பெருமாளின் வைஜயந்தி என்னும் வநமாலையின் அம்சமாய், வைதீகோத்திரமான ஒரு முன்குடுமி ப்ராஹ்மணருடைய திருக்குமரராய் அவதரித்தார். ஸ்ரீமந் நாராயணருடைய கடாக்ஷத்தால் அவதரித்த அவ்வந்தண குமாரருக்குத் தந்தையார் *'விப்ரநாராயணர்'* என்று நாமகரணஞ் செய்து, சௌளம், உபநயனம் முதலிய வைதீக ஸம்ஸ்காரங்களை உரிய காலங்களில் முறைப்படி செய்வித்து, வேத சாஸ்திரங்களைப் பயிற்றுவித்தார். அவர் நான்மறைகளையும், ஆறு சாஸ்திரங்களையும் கசடறக் கற்று வல்லவராய், அக்கல்விக்கு ஏற்பச் சுத்த ஸத்வ குணமே தலையெடுத்து, ஞான வைராக்கியங்கள் வளரப் பெற்று, தாய் தந்தைக்கு மிக்க மகிழ்ச்சி தந்து வாழ்ந்து வந்தார். அப்படி இருக்கையில், ஸ்ரீஸேனை முதலியார், ஸ்ரீ வைகுண்டத்தினின்றும் எழுந்தருளி, அவருக்கு ஸ்ரீ வைஷ்ணவர்கட்கு உரிய ஸமாச்ரயணம் முதலிய சடங்குகளைச் செய்து சென்றனர்.

அப்போது, விப்ரநாரயணர் திருமந்திரார்த்தத்தை அறிந்து, கருணைக்கடலான கமலை கேள்வனது குணாம்ருதத்திலே ஆழ்ந்த சிந்தையுடையவராய், அதனால் இம்மை இன்பத்தை இகழ்ந்து, விவாஹத்தில் விருப்பமற்று, ப்ரஹ்மசர்யத்திலே நின்று, திவ்ய தேசங்களில் சென்று எம்பெருமானை மங்களாசாஸனஞ் செய்யக்கருதி, அவற்றில் முதலான, திருவரங்கம் என்னும் பெரிய கோயிலை அடைந்தார். அங்கு உபய காவேரி மத்தியிலே, சேஷ சயனத்திலே

*"குட திசை முடியை வைத்துக் குண திசை பாதம் நீட்டி*
*வட திசை பின்பு காட்டித் தென் திசை இலங்கை நோக்கி"*

பள்ளி கொண்டுள்ள பெருமானைச் சேவித்து நிற்க, அப்பொழுது அந்த நம்பெருமாள், தம்முடைய வடிவழகினால் இவரைத் தன் மீது மிகுந்த பக்தியுடையராகும்படிச் செய்தருளினார்.

உடனே இவர், தம் வாழ்நாள் வீணாகாதபடி அப்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்ய விரும்பி, பெரியாழ்வார் போலவே தாமும், பெருமாளுக்குப் புஷ்பம், திருத்துழாய் ஸமர்ப்பிப்பதையே ஏற்ற கைங்கர்யமாய் கடைப்பிடித்து, ஒரு திருநந்தவனத்தை அப்பதியிலே செழிப்பாக அமைத்து, காலந்தோறும் பலவகைப் பூமாலைகளையும், திருத்துழாய் நன்மாலைகளையும் கட்டி எடுத்துக் கொண்டு, தமது நிலைக்கு ஏற்ப, ப்ராஹ்மணர் திருமாளிகைகளில் அன்ன பிக்ஷை வாங்கி அமுது செய்து வந்தார்.


இங்ஙனம் இருக்கையில், திருவரங்கத்துக்கு வடக்கிலுள்ள உத்தமர் கோவிலில் தேவ மாதர் அம்சமாய் பிறந்து, மிகவும் அழகியான 'தேவ தேவி' என்பாளொரு தாஸி, ஒரு நாள், தோழிமாரோடும், தமக்கையுடனும் உறையூருக்குச் சென்று, சோழ ராஜன் முன்னிலையில் ஆடல், பாடல்களை நன்கு நிகழ்த்தி, அளவற்ற செல்வத்தை அவனிடத்தில் பெற்று, மிக்க கர்வத்தோடு மீண்டு வருகையில், இளைப்பாறுதற் பொருட்டு இவ்வாழ்வாருடைய பூம்பொழிலின் ஒருபுறத்திலே ஒரு மரத்தடியில் தங்கினாள். அப்போது, அச்சோலையின் சிறப்பை நாற்புறத்திலும் நன்றாக உற்று நோக்கி, அம்மலர்ச் சோலையை தனக்கு உரிய பொருளாக்கி, அதில் பூக்கொய்தும், புனல் விளையாடியும் பொழுது போக்க மனமகிழ விரும்பி, அதற்குரியவனைக் கண்டு தன் வசப்படுத்த நினைத்து அங்கு உலாவி நின்றாள். அவ்வாறு நிற்கையில், ஒரு பக்கத்தில், விப்ரநாராயணர் பளபளவென்ற திருப் பரிவட்டத்துடனும், பன்னிரண்டு திருமண்காப்புகளுடனும், தாமரை மணி மாலை, துளசி மணி மாலைகளுடனும் விளங்கி, பூஞ்செடிகளுக்குப் பாத்தி கட்டுதலும், தண்ணீர்ப் பாய்ச்சுதலும் செய்து கொண்டிருக்கக் கண்ணுற்றாள்.

உடனே அவள், அருகில் வந்து முன்னின்று, அவரை பலமுறை தொழுதாள். இவ்விஷயாந்தரங்களில் குருடராகிய அவர், அவளைக் கண்ணெடுத்தும் பாராது, திரஸ்கரித்துத் தமது கைங்கர்யத்தில் கருத்தூன்றியிருந்தார். அது நோக்கித் தேவதேவி ஆச்சர்யமுற்று, தன் தமக்கையிடம், ''அரசர் முதலிய பலரையும் எளிதில் வசப்படுத்துகிற நான் சென்று எதிர் நிற்கவும், என்னை பாராதிருக்கின்ற இவன் பித்தனோ? பேடனோ?'' என்று கூற, அதற்கு அவள் தமக்கை '' இவன் பித்தனுமல்லன்; பேடனுமல்லன்; ஸ்வாமி கைங்கர்யத்தில் ஊற்றமுற்ற மஹா விரக்தன்; இவனை வசப்படுத்த உன்னாலாகாது'' என்று சொன்னவளவிலே, 'இவனை நான் வசீகரியாமல் விடுவதில்லை' என்று தேவதேவி ப்ரதிக்ஞை பண்ணினாள்.

பிறகு, அவள் தன் ஆபரணங்களைக் கழற்றிக் கொடுத்துத் தோழியரோடு தமக்கையையும் அனுப்பிவிட்டுத் தனியே செங்காவிச் சேலையை உடுத்தி, அவரை அடுத்துத் திருவடிகளில் விழுந்து நமஸ்கரிக்க, அவர், 'நீ யார்? ஏன் இங்கு வந்தாய்?' என்று கேட்க, அதற்கு அவள், 'அடியேன் முற்பிறப்பில் செய்த தீவினையால் தாஸியாகப் பிறந்தவள்; அடியேனை என் தாய், அக்குலத்திற்கு உரிய தொழிலைக் கைக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்க, அதற்கு இசையாமல் அவளைத் துறந்து, மஹா பாகவதரான தேவரீரது திருவடியைச் சரணமடைந்து, உய்வுபெற நாடி வந்தேன். கருணைக்கடலான தேவரீர், அநாதையான அடியேனைக் காத்தருள வேண்டும். செடிகளுக்கு நீர் பெய்தல், பூப்பறித்தல், மாலை கட்டுதல், தேவரீர் இல்லாத சமயத்தில் சோலையைப் பாதுகாத்தல் முதலிய பணிவிடைகளில் எதை நியமித்தாலும் செய்து வரக் காத்திருக்கிறேன்' என்று மிக்க வணக்கத்தோடு விண்ணப்பஞ் செய்தாள். அவர், அவளது கபட சித்தத்தை உணராமல், உடன்பட்டு, தாம் அமுது செய்து மிகுந்த ப்ரஸாதத்தைக் கொடுத்து வர, அவளும் அதனை வாங்கி உட்கொண்டு, பாத்தி கொத்துதல், நீர் பரிமாறுதல் முதலிய குற்றேவல்களைத் தவறாது மிக்க ஊக்கத்துடன் எப்பொழுதும் செய்து கொண்டு, சோலையைச் செழுமையாக வளர்த்து, அவருக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை உண்டாகும்படி, நல்லவள் போல நடித்து வந்தாள்.

இப்படி பல மாதங்கள் கழிந்தபின், ஒரு நாள் பெரு மழை பொழிகின்ற பொழுது, பர்ண சாலையில் பிரவேசித்திருந்த அவ்வந்தணர், வெளியிலே அவள் நனைந்து வருந்துதலைப் பார்த்து இயற்கையான ஜீவகாருண்யத்தினால் உள்ளே வந்து நிற்கும்படி நியமிக்க, அதுவே வ்யாஜமாக அவள், அருகில் வந்து, தனது மென்மொழிகளால் மனதைக் கவர்ந்து, அவரைத் தன் வசமாக்கிச் சில காலம் அவருடனே இருந்து, பின்பு பொருளில்லாத அவரைப் பொருள் செய்யாது கை விட்டுத் தன் வீட்டிற்குச் சென்று சேர்ந்தவளவிலே, இவர், அவள் பிரிவை ஆற்றாமல், அவளது வீட்டு வாயிலில் சென்று தயங்கி நின்றார்.

அவ்வளவிலே, பிராட்டியார் பெருமாளை நோக்கி, ''நமக்கு பலகாலமாகப் பணி செய்து வந்த விப்ரநாராயணர், அதனை முழுவதும் ஒழித்து ஒரு கணிகைக்குத் தொண்டு பூண்டு, அவள் புறக்கணிக்கவும் மனந்திரும்பாது, அவள் இல்லத்துப் புறக்கடைப் பற்றி ஏங்கி நிற்குமாறு தேவரீர் மாயைக்கு இலக்காக்கலாமோ? இதுவும் ஒரு திருவிளையாட்டு இருந்தபடி ஏன்? இனி அவரை விரைவில் மீட்டு, முன் போல்



ஆட்கொண்டு அந்தரங்க பக்தனாக்கி அருளவேண்டும்'' என்று பிரார்த்திக்க, திருமாலும் திருமகள் வார்த்தைக்கு இசைந்து, தமது திருக்கோயிலில் உள்ள பாத்திரங்களுள் ஒரு ஸ்வர்ண பாத்திரத்தை எடுத்துக் கொண்டு, மனித வடிவம் பூண்டு, விப்ரநாராயணர்க்குத் தெரியாமல் அந்த வேசியின் மனைக்கு எழுந்தருளி, வாசற்கதவு திறக்கச் சொல்ல, அவள் உள்ளிருந்தபடியே, ''யார் நீ? எங்கு வந்தாய்?'' என்று கேட்க, அதற்கு நம்பெருமாள், ''நான் அழகிய மணவாளதாஸன், விப்ரநாராயணர் அனுப்ப வந்தேன்'' என்று விளம்பியவளவில், தேவதேவி விரைந்து வந்து கதவைத் திறந்து ''வந்த காரியம் என்ன?'' என்று கேட்க, ஸ்ரீ ரங்கநாதன், தான் கொணர்ந்த பொற்கலத்தை அவள் கையிற் கொடுத்து, ''இதை விப்ரநாரயணர் உனக்கு தரவிடுத்தார்'' என்று கூறியதும், அவள் 'அவரை உள்ளே வரச்சொல்லும்' என்று அனுமதி செய்தபின், அடியவர்க்கு எளியவனான எம்பெருமான் விப்ரநாராயணனிடம் வந்து,' தேவதேவி உம்மை வரச்சொன்னாள்'' என்று சொல்லிச் சென்றார். அச்செவிக்கினிய செஞ்சொல்லைக் கேட்ட மாத்திரத்தில், அவர், பிரிந்த உயிரைப் பெற்றது போல உள்ளங் குளிர்ந்து, உடல் பூரித்து உள்ளே போய்ச் சேர்ந்தார்.

அவ்விரவு கழிந்து, பொழுது விடிந்தவாறே ஸ்வாமி ஸந்நிதியில் திருக்காப்பு நீக்கியவளவில், பாத்திரங்களுள் சிறந்ததொரு பொன் வட்டிலைக் காணாமல், கோயில் பரிசாரகத்தார் இராஜங்கத்தாருக்கு அறிவிக்க, அவர்கள் உடனே வந்து களவு கண்டு பிடித்தற்பொருட்டு, அர்ச்சகர், பரிசாரகர் முதலிய அந்தரங்க பரிஜனங்களைப் பிடித்துப் பலவாறுத் தண்டித்து வருத்தியும், ஒருவர் மீதும் குற்றம் காணாப்படாமையால், ஆங்காங்கு புலன் விசாரித்து வருகையில், அது தேவதேவியின் மாளிகையில் இருக்கின்றதென அவள் வீட்டு வேலைக்காரி ஒருத்தியால் அறிந்து, அங்கு சென்று அதனைக் கண்டு அவ்வீட்டில் உள்ளோர் யாவரையும் குற்றவாளிகளாக்கி, அரசன் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அப்போது, அரசன் தாஸியை நோக்கி, 'பெருமாள் பாத்திரத்தை நீ கவரலாமோ?' என்று கேட்க, அவள், 'யான் இன்னாரதென்று அறியேன்; அழகிய மணவாளதாஸன் என்பானொரு தூதன் மூலமாக விப்ரநாராயணன் எனக்கு இதனை வரவிட்டான்; இவ்வளவே யான் அறிவது' என்று உத்தரம் கூறினாள். அதன் மேல், அரசன் விப்ரரை நோக்கி விசாரிக்க, அவரும் யான் ஒன்றும் அறியேன்; ஏழையான எனக்கு ஓர் ஏவலாளனும் இல்லை' என்று சொல்ல, இங்ஙனம் இருதலை வாய்மொழியையுங் கேட்டபின், அரசன் ஆலோசித்து,

களவாடிய பொருளை வாங்கியவர் செலுத்த வேண்டிய அபராதப் பொருளைக் கட்டும்படி வேசிக்கு விதித்து, அக்காணிக்கையையும், தங்கவட்டிலையையும் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து, பொற்கள்வர்க்கு உரிய தண்டனையை ஆராய்ந்து விதிப்பதற்காக விப்ரநாராயணரைச் சிறையிலிட்டான்.

இவ்வளவில், மீண்டும் ஸ்ரீரங்கநாயகி, பெருமாளை நோக்கி 'இவ்வடியவனைத் தேவரீர் லீலைக்கு விஷயமாக்காமல் க்ருபைக்குப் பாத்திரமாக்கி அருளவேண்டும்' என்று வேண்ட, பெருமாள் அதனை அங்கீகரித்து, அன்றிரவு அரசன் கனவிலே தாம் எழுந்தருளி 'தாஸியினிடத்துக் காதல் கொண்ட இவ்வந்தணனுடைய கருமத்தைக் கழித்தற்பொருட்டு, நாமே பொன் வட்டிலைக் கொண்டு போய்த் தந்து இவனைத் தண்டிப்பித்தோம்; உண்மையில் இவன் கள்வன் அல்ல; பரிசுத்தனே' என்று தெரிவிக்க, அரசன் துயில் களைந்ததும் கனாத் தோற்றத்தை மந்திரி முதலியோருக்கு வியப்புடனே வெளியிட்டு, விப்ரரை விடுவித்து உபசரித்து அனுப்பிவிட்டான்.

பிறவிப் பெருஞ்சிறையினின்றும் விடுபடுதற்கு முதற்குறியாகக் காவல் விடுபெற்ற விப்ரர், தாம் துளவத் தொண்டு துறந்து, வைதீக ஒழுக்கமும் மறந்து, பொருட்பெண்டிர், பொய்ம்மை மயக்கத்தில் ஆழ்ந்து, இடங்கழியாளனாய் அலைந்து பரிபவப்பட்டதை நினைத்து நினைத்து மிகவும் பச்சாதாபப்பட்டு, பிராயச்சித்தம் செய்து கொள்ள முயன்று, பெரியோர்களைச் சார்ந்து, தமது தோஷங்களை எல்லாம் விடாது எடுத்து வாயாற் சொல்லி, 'இவற்றிற்குப் பிராயச்சித்தம் இன்னதென்று துணிந்து கூறியருள வேண்டும்' என்று பிரார்த்திக்க, அவர்கள், பல நூல்களை ஆராய்ந்து 'சகல பாபங்களும் பரிஹாரம் ஆவதற்கு ஏற்ற ப்ராயச்சித்தம், ஸ்ரீ பாகவதர்களுடைய ஸ்ரீ பாதத் தீர்த்தத்தை உட்கொள்வதே' என்று கூற, அங்ஙனமே அவர் அதனைப் பெற்றுப் பருகி பரிசுத்தராயினர்.

பின்பு, அவர் முன்போலவே பகவத், பாகவத பக்தி தலையெடுத்து 'ஆடிப் பாடி அரங்கவோ! என்றழைக்கும் தொண்டரடிப்பொடியாட' (பெருமாள் திருமொழி) என்று பலவாறாக அருளிச் செய்யப்பட்ட நூற்பொருளிலே நுழைந்த நெஞ்சமுடையவராய், ஸ்ரீ வைஷ்ணவர் களுடைய ஸ்ரீ பாத தூளியாய், அவர்கட்கு கீழ்ப்படிந்து அடிமைப் பூண்டு ஒழுகி, அதனால் தமக்கு அதுவே நிரூபமாகத் ***'தொண்டரடிப்பொடி'*** என்று திருநாமம் பெற்றார்.

(தொடர்ச்சி ... 22-ம் பக்கம்)

# ஜடாயு மோக்ஷம்

காட்டில் ராமனும், லக்ஷ்மணனும் காணாமல் போன சீதையைத் தேடிக் கொண்டு சென்றனர். போகும் வழியில் ஜடாயுவைப் பார்த்தனர். நமக்கு நண்பன் என்று வேடம் பூண்டு சீதையை இஜ்ஜடாயுதான் விழுங்கி விட்டது என்று கோபமடைந்து, வில்லைக் கையிலெடுத்தான் ராமன். இதைப்பார்த்த ஜடாயு, கவசம், வில் முதலியவைகளைக் காட்டி, 'ராவணன் செய்த கொடுமை இது' என்றான்.

*'வடுக்கண், வார்கூந்தலாளை, இராவணன் மண்ணினோடு*
*எடுத்தனன் ஏகுவானை, எதிர்ந்து எனது ஆற்றல் கொண்டு*
*தடுத்தனன் ஆவது எல்லாம், தவத்து அரண் தந்த வாளால்*
*படுத்தனன், இங்கு வீழ்ந்தேன் இது பட்டது'*

என்கிறார் கம்பர். ''ராமனே! இக்காட்டில் எந்த ஓஷதி (மருந்து) போன்ற சீதையைத் தேடுகிறாயோ அந்த சீதையும், எனது உயிரும் ராவணனால் அபகரிக்கப் பட்டன'' என்றார் ஜடாயு.

இங்கு ஒரு விஷயத்தை கவனிக்கவும். ஆஞ்சநேயருக்கு சிறிய திருவடி என்று பெயர். கருடனுக்கு பெரிய திருவடி எனப் பெயர். ஜடாயுவுக்கு பெரிய திருவுடையார் எனப் பெயர். இது ஸம்ப்ரதாயத்தில் ஏற்பட்டது. இதற்குக் காரணம்: ராமனைப் பார்த்து ஜடாயு, 'ஆயுஷ்மன்: தீர்க்காயுஸ் உடையவனே!' என்று கூப்பிட்டார். மனிதனுக்கு ஆயுட்பாகம் பூர்ணமாக இருந்தாலன்றோ மேல் சுகங்களை அனுபவிக்க வாய்ப்பு ஏற்படும். இழந்த சீதையை மறுபடி பார்க்க, ராமனுக்கு ஆயுட்பாகம் அவசியம் வேண்டும். இதை ஜடாயு பக்ஷி வேண்டிக் கொண்டது. ஆக, அவருக்கு இப்பெயர் உண்டாயிற்று.

மேலும், சீதை தனது கணவனைத் தவிர, மற்றொருவனை மனதாலும் தொடுகிறவள் அல்லள். இது பற்றி, ஆஞ்சநேயனிடம் மேலே கூறப்போகிறாள். இங்கு தனக்காக ராவணனிடம் போர் செய்த ஜடாயுவை கட்டிக் கொண்டு அழுதாள். எனவே, பெரிய திரு என்று சொல்லப்பட்ட மஹாலக்ஷ்மியின் அநுக்ரஹம் பெற்றவர் ஜடாயு என்ற காரணத்தால், இவரை பெரிய திருவுடையார் என்று கூறுவது மரபு.

இதையே கம்பரும்,

*'பிள்ளைச் சொல் கிளி அனானைப் பிரிவுறல் உற்றி பெற்றி*
*தள்ளுற்ற அறமும் தேவர் துயரமும் தந்தயோல்;*
*கள்ளப்போர் அரக்கர் என்னும் களையினைக் களைந்து வாழ்த்தி:*
*புள்ளிற்கும் புலன்இல் யேய்க்கும் தாய் அன்னபுலவி வேலோய்'*

என்று 'வாழ்த்தி' கூறுகிறார்.

ராமன், கையில் உள்ள வில்லைக் கீழே போட்டு, கழுகரசனைக் கட்டிக் கொண்டு பூமியில் விழுந்து, லக்ஷ்மணனுடன் அழுதான்.

*'ராஜ்யாத் ப்ரம்சோ வனே வாச: ஸீதா நஷ்டா ஹதோ த்விஜ ।*
*ஈத்ருசீயம் மமாலக்ஷ்மீ: நிர்தஹேதபி பாவகம் ॥''*

''ராஜ்யம் நழுவுதல், வனத்தில் வசிப்பது, ஸீதை தொலைந்து போவது, ஜடாயு இறந்தது இவையெல்லாம் எனது தௌர்பாக்யம். இப்படிப்பட்ட துர்தசை, நெருப்பையும் அழித்து விடும். எனக்குக் கிடைத்த ராஜ்யம் கைகேயியால் போய்விட்டது. ராஜ்யத்தை இழந்தாலும் பிக்ஷுக வேஷத்துடன் ராஜ்யத்தில் இருந்தாவது பிழைக்கலாம் என்றிருந்தேன். அதுவுமின்றி காட்டில் வாசம் ஏற்பட்டது. காட்டிலே வசித்தாலும், ப்ரியமான மனைவியுடன் வாழலாம் என்றிருந்தேன். அதுவும் கிடைக்காத வண்ணம் ஸீதையை யாரோ அபகரித்துவிட்டான். எனக்கு ஏற்பட்ட கஷ்டத்தை பந்துக்களிடம் கூறி ஆறுதல் அடையலாம் என்று நினைத்தேன். பந்துவான ஜடாயுவும் கொல்லப்பட்டது. ஆகையால், எப்பொழுதும் பிரியாமல் இருக்கும் உன்னையும், இப்பொழுது ஏற்பட்ட துர்தசை பிரியச் செய்யுமோ?'' என்று லக்ஷ்மணனைப் பார்த்து ராமன் கூறினான்.

தனது பட்டாபிஷேகத்தில், இடையூறு முன்பு வந்த போது, 'வனத்தில் வசிப்பதே ஆனந்தத்தைக் கொடுக்கும்' என்றான் ராமன். இப்பொழுது, இந்த வனவாசத்தை, சீதையின் பிரிவிற்குக் காரணமான படியாலும், பந்துவான ஜடாயுவின் பிரிவிற்குக் காரணமானபடியாலும் ராமன் வெறுக்கிறான். ராமனால் விசாரிக்கப்பட்ட ஜடாயு, விச்ரவஸின் புத்திரன், குபேரனின் சகோதரன். ''உனது மனைவியை அபகரித்தான்'' என்று சொல்லும் போதே (மேல் ராக்ஷஸர்களுக்கு அதிபதியான ராவணன் லங்கையில் வசிக்கிறான் என்று சொல்வதற்கு முன்) அதன் வாயிலிருந்து ரத்தமும் மாமிசமும் வெளிவந்தது. ஜடாயுவும் இறந்தார். ராவணன் பற்றிய இவ்விஷயத்தை சம்பாதி பின்பு கூறப்போகிறார்.


ராமன், ஜடாயுவைப்பார்த்து 'மேலும் சொல், சொல்' எனக் கேட்டான். அதற்குள் ஜடாயு இறந்ததைக் கண்டு ராமன், 'எனக்காக உயிர் விட்டது இப்பறவை. பறவைகளிலும் தர்மம் செய்பவை இருக்கின்றன. சீதையை இழந்ததோ, ராஜ்யத்தை இழந்ததோ எனக்குப் பெருந்துயரை அளிக்கவில்லை. கழுகரசனின் இறப்பு தான் பெருந்துயரை அளிக்கிறது. என் தந்தையான தசரதர் எனக்கு எப்படி பூஜிக்கத் தகுந்தவரோ, அவ்வாறே இஜ்ஜடாயுவும் பூஜிக்கத் தக்கவர். ஆகையால், இதற்கு உத்தர சடங்கை நானே செய்கிறேன்' என்று சொன்னார். ராமனுடைய நியமனத்தின்பேரில், சிதை அடுக்கப்பட்டது. அதில், இருவருமாக ஜடாயுவை ஏற்றி வைத்தனர். ராமனும் மந்திரங்களை ஓதி சம்ஸ்காரம், உதகதானம், முதலியவைகளைச் செய்தான். இங்கு ராமாயணத்திலுள்ள சில ஸ்லோகங்களை வரைகிறோம்.

*யா கதிர் யக்ஞசீலானாம் ஆஹிதாக்னேஃச யா கதி:*
*அபரா வர்த்தினாம் யா ச யா ச பூமிப்ரதாயினாம்*
*மயா த்வம் ஸமனுக்ஞாத: கச்ச லோகான் அநுத்தமான் ॥*

எப்பொழுதும் ஹோமம், வேள்வி, முதலியவைகளை முறைப்படி செய்துவரும் இல்லற வாழ்க்கையில் இருப்பவர்களும், ஸதா காட்டிலிருந்து தவம் புரியும் வானப்ரஸ்தர்களும், காட்டிற்குச் சென்று வைராக்கியத்துடன் இருந்து திரும்பி வராமலிருக்கும் துறவிகளும், போரில் முதுகு காட்டி ஓடாதவர்களும், பூமியில் ஏற்படும் ஸுக போகங்களை விட்டுள்ள நைஷ்டிக ப்ரஹ்மசாரிகளும், எந்த உலகங்களை அடைவார்களோ, அந்த உலகங்களை, உண்மையே பேச வேண்டும் என்கிற விரதமுடைய, தட்டுத் தடங்கலின்றி எல்லாவற்றையும் செய்யத் திறமை பெற்ற என்னால் அனுப்பப்பட்ட நீ அடைவாயாக' என்றான் ராமன்.

'விசுவாமித்திர முனிவர், திரிசங்குவை சொர்க்க லோகத்துக்கு அனுப்பியது போல், அவர் சீடனான நான் அனுப்புகிறேன் எனக் கருத வேண்டாம். நினைத்த மாத்திரத்தில் எல்லாவற்றையும் காக்க வல்லமை பெற்றவன் நான்' என்றான் ராமன்.

ஸ்ரீராமன், ஜடாயுவுக்கு சொர்க்கத்தைக் கொடுக்கும் விஷயத்திலும் விபீஷண சரணாகதி விஷயத்திலும், விசுவாமித்திரரின் திருப்பள்ளி எழுப்பும் ஸமயத்திலும், மற்றும் சிற்சில இடங்களிலும், தான் ஸர்வேஃவரன் என்பதை உணர்த்துகிறான். சீதாப்பிராட்டியார், அசுரர்கள் ஆஞ்சநேயருடைய வாலில் நெருப்பு வைத்த போதும், திரிஜடை



அடைக்கலம் புகும் போதும், தன்னுடைய பரதத்வத்தை வெளிப் படுத்தினாள்.

'மயாத்வம்' என்றவிடத்து, மயா என்பதற்கு லக்ஷ்மியின் அவதாரமான சீதை என்றும் பொருள். 'சீதையே உனக்கு நற்கதி அளித்து விட்டாள். எனவே, எல்லா நல்ல உலகங்களையும் அடைவாய்' என்றும் பொருள்.

''சரபங்கர், அழிவில்லாத எந்த நற்கதியை பெற்றாரோ, அதையே நீயும் பெறுவாய்'' என்பது ராமனின் கருத்து. தசரதனுக்கும் கிடைக்க அரிதான நைவாபம் என்று சொல்லக்கூடிய, எள்ளைக் கொண்டு செய்யும் ஜல தர்ப்பணத்தை ராமன் அழுதுகொண்டே செய்தான். இம்மேன்மை, யாருக்கும் கிடைப்பதறிது. இந்த பக்ஷிக்கு மோக்ஷமும் கிடைத்தது. ராமனுக்காக இப்பறவையும், தச்ரத சக்ரவர்த்தியும் உயிரை விட்டனர். இது இருவருக்கும் சமம். ஆயினும், தசரதருக்கு /சொர்க்கம் தான் கிடைத்தது, ராமனை காட்டுக்கு அனுப்பக் காரணமானபடியால்.

திருடன், பிறர் பொருளைத் திருடும் பொழுது, திரும்பவும் சொத்துக்காரன் அடையாத வகையில், நல்ல வேளை பார்த்துத் திருட வேண்டும். ராவணன், எல்லாம் அறிந்தவனாயினும் சீதையை அபகரிக்கும் வேளை, தனக்கு அனுகூலமா என்பதை கவனிக்கவில்லை. 'விந்த முஹூர்த்தம்' என்பது ஒரு சமயம். இச்சமயத்தில் திருடப்பட்ட பொருள் எஜமானனுக்கு கிடைத்துவிடுமாம். இதை அறியாமல், ராவணன் சீதையை அபகரித்துவிட்டான். இதையறிந்த பறவை, ராமனை தீர்க்காயுசுடன் இருப்பாயாக என்று மங்களாஸாசனம் செய்தது.

அபராவர்த்தினாம் என்பதற்கு வேறு வகையிலும் பொருள் கூறலாம். 'எல்லா பாபங்களினின்றும் விடுபட்டவன், மோட்சத்தைப் பெறுகிறான். திரும்பி அவன் வருவதில்லை. அவர்கள் பெறும் லோகங்களை நீ பெறுவாயாக' என்று இங்கு கம்பர் கூறுவதை நோக்கவும். லோகங்களை என்று பன்மையில் கூறியது ஒவ்வொரு உலகத்தையும் க்ரமமாக அடைந்து பிறகு உத்தம லோகத்தைப் பெறுவாய் என்பதில் நோக்கமாம்.

*'சீதங்கொள் மலருளோனும் தேவரும் என்பதென்னே*
*வேதங்கள் காண்கிலாமை வெளிநின்ற மறையும் வீரன்*
*பாதங்கள் கண்ணில் பார்த்தான் படிவங்கள் நெடிய பஞ்ச*
*பூதங்கள் விளியும் நாளும் போக்கிலா உலகம் புக்கான்'*

கழுகரசனின் உடலை தகனம் செய்து, அதனால் பக்தர்களிடத்தில் அதிகமான பக்ஷபாதத்தை உடையவன் பகவான், என்பதை இங்கு காட்டியதாக,

*'விக்ரம யசோலாப விக்ரீத ஜீவித க்ருத்ரராஜ*
*தேஹ திதக்ஷா லக்ஷித பக்தஜந தாக்ஷிண்ய ।*

ஸ்ரீதேசிகன் சாதித்தார்.

*'மத்க்ருதே நிதனம் யஸ்மாத் த்வயா ப்ராப்தம் த்விஜொத்தம*
*தஸ்மாத் மம நியோகேன மத்ப்ராப்திம் ப்ராப்ஸ்யஸி த்ருவம் ।*

லிங்க புராணத்தில் இந்த ஸ்லோகம் உள்ளது. எனக்காக நீ உயிரைத் துறந்தாய். எனவே, 'என் உத்தரவின் பேரில் எனது உலகத்தை அடைவாய்' என்று ராமன் கூறினான். ஆகவே, ''வேள்வி முதலியவை களைச் செய்கின்ற க்ருஹஸ்தன் முதலியவர்கள் அடையும் உயர்ந்த லோகங்களை அடைந்து, அங்கு சுகபோகங்களை நன்கு ஆசை தீர அனுபவித்து, கடைசியில் என்னை அடைவாய்'' என்பது நோக்கமாம். இங்கு, ஸ்ரீ தேசிகனின் ஸ்ரீ ஸூக்தி,

*அவதீர்ய சதுர்விதம் புமர்த்தம்*
*பவதர்த்தே விநியுக்த ஜீவித: ஸந் ।*
*லபதே பவத: பலாநி ஜந்து:*
*நிகிலாந் யத்ர நிதர்சனம் ஜடாயு: ॥*

*'திருப்புட்குழி'* என்கிற திவ்யதேசம், காஞ்சீபுரத்திற்கு அருகே உள்ளது. இங்கு விஜயராகவன் என்னும் பெருமாள் வீற்றிருக்கிறார். ஜடாயுப் பறவையைக் குழியிலிட்டு ஈமக்கடன் செய்த புனிதத்தலம் இது. எனவே இப்பெயர் உண்டாயிற்று. புள்...பறவை, குழி...குழியிலிட்ட இடம். அப்பறவைக்கு 'திரு' அடை மொழி. ரணபுங்கவன், ஆகவ புங்கவன், ஸமரபுங்கவன், அதாவது, போரில் சிறந்தவன் என்ற திருநாமங்களை இவருக்குச் சூட்டுகிறார். திருமங்கையாழ்வாரும், இந்த பகவானை நினைத்து ''போரேறு'' என்று மங்களசாசனம் செய்கிறார்.

*புள்ளபூதங்குடி* என்கிற திவ்ய தேசம், திருக்குடந்தை சமீபம் உள்ளது. ஜடாயு என்னும் புள் அங்கு பரிசுத்தமாயிற்று. எனவே அப்பெயர் உண்டாயிற்று என்று சொல்லுவர். இந்த திவ்ய க்ஷேத்திரத்தில், ராமன் நான்கு திருக்கைகளுடன் பரகாலருக்கு (திருமங்கை மன்னனுக்கு) ஸேவை ஸாதித்தார். எல்லா திவ்ய தேசங்களையும் மங்களாசாஸனம் செய்துகொண்டு வந்த இந்த ஆழ்வார், இங்கும் வந்தார். இரு

திருக்கைகளுடன் கூடி படுத்திருக்கும் மூலபரத்தைப் பார்த்தார். யாரோ ஒரு அரசன் படுத்திருக்கிறான் என்றெண்ணி திரும்பி விட்டார். அப்பொழுது, இவர் கண்கள் ஒளி இழந்தன. அனைத்து இடமும் இருள் சூழ்ந்தது. திரும்பிச் செல்ல முடியாமற் போய்விட்டது. காரணமின்றி இவ்வாறு தனக்கு ஏற்பட்ட துர்தசையை ஆலோசித்து மீண்டும் திரும்பிப் பார்த்தார். பகவான் நான்கு கைகளுடன் ஸேவை ஸாதித்தார்.

*'அறிவதரியான் அனைத்துலகுமுடையான் என்னை ஆளுடையான்*
*குறியமாணுருவாகிய கூத்தன் மன்னி அமருமிடம்*
*நறியமலர் மேல் சுரும்பு ஆர்க்க எழிலார் மஞ்ஞை நடமாட*
*பொறிகொள் சிறைவண்டிசை பாடும் புள்ளம் - பூதங்குடிதானே'*

என்று முதலான பாசுரங்களைப் பாடினார்.

ஜடாயுவை சம்ஸ்காரம் செய்யும் போது, ராமன், தன் மனைவியான சீதை அருகில் இல்லாததால், சம்ஸ்காரம் செய்ய உரிமை இல்லாமையை நினைத்தார், அப்பொழுது மஹாலக்ஷ்மி, ராமனின் அபிப்ராயம் கண்டு அங்குள்ள புஷ்கரிணியின்றும் வெளிவந்தாள். பிறகு (ராமன் ஜடாயுவிற்கு) சம்ஸ்காரம் செய்தாராம். இதை மனதில் வைத்தே, இந்த ஆழ்வார் கடைசி பாசுரத்தில், *'கற்றாமரித்துக் காளியன்தன் சென்னி நடுங்க நடம் பயின்ற, பொற்றாமரையாள் தன்கேள் வன்புள்ளம் பூதங்குடி தன்மேல்'* என்று பாடினார்.

ஜடாயு, பறவையாயினும் பகவத் ஸம்பந்தம் ஏற்பட்டு பாகவதரானபடியால், ராமனே அதற்கு சம்ஸ்காரம் செய்தார். விசுவாமித்திரர் தவம் புரிந்து க்ஷத்ரியத்வத்தை நீக்கி ப்ராஹ்மணத்வத்தை அடைந்தார். அது போல் இவரும் பெற்றார்.

த்ரௌபதி, பஞ்ச பாண்டவர்களை மணந்து கொண்டாள். இது எல்லாருக்கும் பொருந்தாது. சிலருக்குத்தான் முன்பிறவியில் ஏற்பட்ட வினைப் பயனாக இவ்வாறு வரும். பீஷ்மரை, தரும புத்திரர் ப்ருஹ்மமேதத்தால் சம்ஸ்காரம் செய்தார். இதெல்லாம் வியக்தி விசேஷ நியதம். ஜடாயு விஷயத்திலும் இதை அறிய வேண்டும்.

கூரத்தாழ்வார், அக்ஷாண்ண யோகபதம், அக்ர்யஹதம் என்று அதிமாநுஷஸ்தவத்தில், ஜடாயு மோக்ஷமடைந்த விஷயத்தை விரிவாகக் கூறியிருக்கிறார். 'எம்பெருமானை அடைய, கர்ம ஞானம், பக்தி, ப்ரபுத்தி முதலியவைகள் காரணம். இப்பறவையோ, இவைகளைச் செய்யச் சக்தியற்றது. மேலும், ப்ராஹ்மணனால் கொல்லப்பட்டவனுக்கு நற்கதி கிடையாது என்கிறது சாஸ்திரம். ராவணனோ அந்தணன். ஆக,

எவ்வகையிலும் நற்கதி பெற வாய்ப்புடையதன்று இப்பறவை. இதற்கு, நீ மோக்ஷமளித்தாய். மோக்ஷம் என்பது பல உலகங்களைத் தாண்டி வெகு தூரத்தில் உள்ளது. இதை அறிந்து, மோக்ஷத்தை அளிக்க வல்லமை பெற்ற நீ, இவ்வுலகிலேயே ராவணனால் தூக்கப்பட்டு காணாமல் போன சீதையை எவ்வாறு அறியாய்? எவ்வாறு அவளைப் பெற முடியாமல் திகைத்தாய்? வெகு ஆச்சரியம் இது, அந்தோ!'' என்று துதித்தார்.

'நோற்றுச்சுவர்க்கம்' என்கிற பாசுரத்திலும், நோற்றுப் பெற வேண்டிய உயர்ந்த லோகத்தை, நோம்பு நோற்காமலே ஜடாயு பெற்ற விஷயத்தை, ஆண்டாள் பேசினாள். இதன் வாயிலிருந்து ரத்தம் பெருகி உயிர் மாண்டதை, வால்மீகி பேசினார். அதை ஒட்டி, ராவணன் அதன் வாயைக் கீண்டவன், ஆகையால் பொல்லாத அரக்கன் என்பதை 'புள்ளின் வாய்' பாசுரத்தில் ஆண்டாள் குறிப்பிட்டாள் என்பதை அனுபவிக்கவும்.

**Courtesy : பெருக்காரணை மாடபூசி ஸ்ரீ உ.வே. சக்ரவர்த்தியாச்சார்ய ஸ்வாமி.**

(14ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பால், தொண்டரடிப்பொடியாழ்வாருக்கு ஸ்ரீ ரங்கநாதன் தத்துவஜ்ஞானமளித்து, தனது பரம், வ்யூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என்ற ஐவகை நிலையையும் தெளிவாக விளக்கியருள, அவர் அவற்றில் அர்ச்சாவதாரத்தில் மிக்க ஈடுபாடு கொண்டு, அதிலும் எம்பெருமான் உகந்தருளின நிலங்கள் எல்லாவற்றினுள்ளும் திருவரங்கத்து நம்பெருமானை அல்லாது பிறிதொரு பொருளை அறியராய், அப்பிரானுக்கே தாம் உள்ளளவும் துளவத்தொண்டு பூண்டு வாழ்ந்து, தமது அநுபவத்தைப் பிரபந்த மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்கக் கருதி, *திருமாலை, திருப்பள்ளியெழுச்சி* என்ற திவ்யப் ப்ரபந்தங்களை அருளிச் செய்து, உலகத்தாரை வாழ்வித்து, நூற்றைந்து பிராயம் ஸ்ரீரங்கத்திலேயே வாழ்ந்திருந்து, அநந்தரம் நலமந்த மில்லாதோர் நாட்டை அடைந்தார்.

தன் அன்பால் நிறைந்த விப்ரநாராயணர், ராஜ தண்டனை யிலிருந்து மீண்டு, தொண்டரடிப்பொடியாரான செய்தியை அறிந்த தேவதேவி, தாமும் உய்வு பெற உன்னித் தனது பொருளனைத்தையும், அரங்கனுக்கே உரியதாக்கி விட்டுப் பரம ஸாத்விகையாய், கோயிலில் திருவலகிடுதல், மெழுகுதல், கோலமிடுதல் முதலிய அடிமைத் தொழில்களைச் சில காலஞ் செய்து கொண்டிருந்து, ஊழ்வினை ஒழித்து, தனது ஜன்மத்தை ஸபலமாக்கி முடிவில் நற்கதி நண்ணினாள். ●

# ஸ்ரீ குருஜியிடம், பக்தர்கள் அவ்வப்பொழுது கேட்ட கேள்விகளும், அதற்கு ஸ்ரீ குருஜி அளித்த பதில்களும். (தொடர்ச்சி)

*கேள்வி : பகவான் ரமணர், மௌனத்தின் மூலமாகவே பிறருடைய கேள்விகளுக்குத் தெளிவான பதில் அளித்தார் என்று கூறுகிறார்கள். இதன் பின்னணி என்ன?*

ஸ்ரீ குருஜி : உண்மையை அறிவதற்கு நமக்கு சாஸ்திரங்கள் வழிகாட்டுகின்றன. ஆனால், அந்த சாஸ்திரங்களே நமக்கு சத்தியத்தைப் ப்ரத்யக்ஷமாக்கிவிடாது. அனுபவம் மட்டுமே நமது சந்தேகங்களை நீக்கித் தெளிவை அளிக்க முடியும். எத்தனை தான் படித்திருந்தாலும் ஒருவருக்கு அநுபூதி ஏற்படும் வரை, அதில் முழுமையான ஈடுபாடு கிடைக்கும் வரை, சந்தேகங்கள் இருக்கத்தான் செய்யும். ஆகையால், அப்படிப்பட்டவர்கள் செய்யும் உபதேசங்களைக் கேட்பவர்களுக்குச் சந்தேகம் தீராது. ஆகவே, கேள்வி ஞானத்தினாலும் பரிபூரண பிரயோஜனம் கிடைக்காது.

சத்தியத்தை தரிசனம் செய்துவிட்டால், அங்கே மனம், வாக்கு, காயம் யாவுமே, அந்த அனுபவத்தில் திளைத்து நின்று விடுகிறது. அதுவே, அந்த அநுபூதியின் மேன்மையாகும். இதுவே உண்மையான மௌனமும், நிரந்தரமான தியானமும் ஆகும். இதுவே நமது இயல்பான நிலை. மனதால் சிந்திப்பதும், வாயால் பேசுவதும் இதற்குத் தடையாகவே அமைந்து விடும்.

நாம் பல நூல்களைப் படித்தாலும், பிறர் உபதேசங்களைக் கேட்டாலும் மனத்தெளிவு ஏற்படுவதில்லை. இதற்குக் காரணம் என்ன? அவ்விதம் சொல்லுபவர்களுக்கே சத்திய தரிசனம் இல்லை என்பது தான். ஆகவே, அவர்களுக்கு சந்தேகம் தீர்ந்த பாடில்லை. ஆனால், சத்தியத்தைப் பூரணமாக அறிந்த ஞானியோ, வாய் திறந்து பேசாமல் மௌனமாக இருந்து விடுகிறான். அப்போது, அங்கே ஆன்ம சக்தி ஒளிவிடுகிறது. அவனுடைய சந்நிதியின் சிறப்பே நம்முடைய சந்தேகங்களைத் தெளிவுபடுத்துகிறது. அப்படி ஏற்படும் அனுபவம் சத்தியத்தை நோக்கிச் செல்லும் பாதைக்கு நம்மைத் தானாகவே அழைத்துச் செல்ல வல்லது. ஆகவேதான், 'முற்றும் உணர்ந்த ஞானியின் மௌனத்தைக் காட்டிலும் சிறந்த உபதேசம் இல்லை' என்று சொல்லப்படுகிறது.

*கேள்வி : யக்ஞம் என்றால் என்ன? அக்கினியில் பொருட்களை இடுவதால் அது பிற தேவதைகளுக்கு எவ்வாறு போய்ச் சேரமுடியும்?*

பதில் : நம்முடைய மதத்தில், வேத மந்திரங்களில் சொல்லப்பட்ட விஷயங்களை மனதால் தியானித்துக் கொண்டும், (**பா**வித்துக் கொண்டும்) வாக்கினால் சொல்லிக் கொண்டும் காரியத்தை அக்கினி முகமாகப் பண்ணுவதுதான் யக்ஞம் ஆகும். யக்ஞம் என்ற சொல்லின் மூலம் 'யஜ்' என்பதாகும். 'யஜ்' என்றால், வழிபடுவது, பக்தி செலுத்துவது என்று பொருள். பரமாத்மாவிடமும், தேவதைகளிடமும் மனப்பூர்வமாகப் பக்தி உணர்வுடன் ஈடுபட்டுச் செய்யும் வழிபாடே யக்ஞம் ஆகும்.

யக்ஞத்தில் பல்வேறு பொருட்களை அக்கினி மூலமாக அர்ப்பணித்து விடுவதற்கு என்ன காரணம்? நம்முடைய உடலில் எவ்வளவோ உறுப்புகள் இருந்தாலும், எப்படி வாய் மூலமாகவே உணவை எடுத்துக் கொள்கிறோமோ, அது போலவே தேவர்களுக்கு நாம் அர்ப்பணிக்கும் திரவியங்களை, பஞ்சபூதங்களில் ஒன்றான அக்கினி மூலமாகவே அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள்.

நாம் அவற்றை அக்கினியில் இடுவதால், அது அக்கினிக்கு மட்டும் போய்ச் சேருவதில்லை. நம்முடைய உலக நன்மைக்கு வழிவகை செய்யும் தேவர்கள் அனைவருக்குமே அது காணிக்கையாய்ப் போய்ச் சேருகிறது. அந்தக் காரியத்தைச் செய்யும் அக்கினி தேவனுக்கும் சில ஆஹுதிகள் அளிக்கப்படுகின்றன. தேவர்களுடைய சரீரம் நம்முடையதைப் போலப் பாஞ்ச பௌதிகமான அமைப்புக் கொண்டது அல்ல. ஆகையால், நாம் சமர்ப்பிக்கும் திரவியங்களின் சாரங்கள் அவர்களுக்குப் போய்ச் சேர்ந்தாலே போதுமானது. இவ்வாறு, இந்த ரஸம், மந்திர சக்தியாலும், நாம் **பா**விப்பதாலும் அவர்களை அடைந்துவிடுகிறது. ஆகையால், பொருட்கள் மிகுந்து அப்படியே இருந்தாலும், எரிந்து பஸ்மம் ஆகிவிட்டாலும், அவற்றின் சாரம் தேவர்களை அடைந்து விட்டது என்றே கொள்ளவேண்டும்.

யானை, விளாம்பழத்தை அப்படியே முழுவதாக விழுங்கிவிடும். பிறகு வெளியில் வரும் போது முழுமையாக இருப்பது போலவே தோன்றும். ஆனால், பழத்தின் சாரமான உட்பகுதி முழுவதையும் யானை எடுத்துக் கொண்டிருப்பது புரியும். அதைப்போல, யக்ஞத்தில் அக்கினியில் இடப்பட்ட பொருட்கள், பிரசாதமாக மிஞ்சி இருந்தாலும், அவற்றின் சாரம் தேவர்களைச் சென்றடைந்துவிட்டது என்பதே உண்மை.

*கேள்வி : காயத்ரீ மந்திரம் வேத மந்திரங்களின் தாயார் என்றே சொல்லப்படுகிறது. தாய்மை ஸ்தானத்தில் (காயத்ரீம் சந்தஸாம் மாதா) உள்ள இந்த மந்திரத்தை பெண்கள் ஜபிக்கக்கூடாது என்று சொல்லுவது பொருந்துமா?*

பதில் : சகல வேத மந்திரங்களின் சாரமும் காயத்ரீயில் அடங்கியுள்ளது. மந்திரங்களிலேயே மிகச் சிறந்தது (சிரேஷ்டமானது) இதுதான். இப்படி தனிச் சிறப்பு பெற்ற இந்த மந்திரத்தை, தாயாரை மதிப்பது போல, நாம் வேத மந்திரங்களின் தாய் ஸ்தானத்தில் வைத்து வழிபடுகிறோம். ''ஒரு குடும்பத்தில், தாயாருக்கு எல்லோரும் மதிப்பும், மரியாதையும் தருவதைப்போல, வழிபாட்டிற்குரிய மந்திரங்களைப் பயன்படுத்து பவர்கள், காயத்ரீயை மாதாவாகக் கருதி வணங்க வேண்டும்'', என்பதே இதன் கருத்து.

ஆகவே, தாயார் என்று சொன்னதால் அந்த மந்திரத்துக்கும் பெண்மைக்கும் சம்பந்தப்படுத்திச் சொல்லி விடமுடியாது. நாட்டிற்காகத் தியாகங்கள் பலவற்றைச் செய்த மகாத்மா காந்தியை, தேசப்பிதா என்று நாம் மதிப்பதைப்போல, இதுவும் மதிப்பு காரணமாகக் கொடுக்கப்பட்ட, உருவகமான ஸ்தானம் என்றே நாம் கொள்ளவேண்டும்.

*கேள்வி : சில பண்டிகைகள், அவற்றுக்குரிய மாதங்களை விட்டு, முன்னாலும் பின்னாலும் வருவது ஏன்? ஒரே பண்டிகையை சில சமயம் வெவ்வேறு மாதங்களில் கொண்டாட நேருவது ஏன்?*

பதில் : காலத்தைக் கணக்கிடுவதில் சிலர், சூரியனைப் பிரதானமாகவும், சிலர், சந்திரனைப் பிரதானமாகவும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிக் கணக்கிடுவதே, சில பண்டிகைகள் மாதங்கள் மாறி வருவதற்குக் காரணம். சூரியனைப் பிரதானமாக வைத்துக் கணக்கிடுவதற்குச் 'சௌரமானம்' என்று பெயர். சந்திரனைப் பிரதானமாக வைத்துக் கணக்கிடுவதற்குச் 'சந்திரமானம்' என்று பெயர். இதைத் தவிரப் பண்டிகைகளைக் கொண்டாடுவதிலும், சிலர் நட்சத்திரத்துக்குப் பிரதானம் கொடுத்தும், சிலர் திதிகளுக்குப் பிரதானம் கொடுத்தும் கொண்டாடி வருகின்றனர். இதனாலும், சில பண்டிகைகள் முன்னாலும் பின்னாலும் மாறி மாறி வருகிறது.

அதே போல சிலர், திதிகள் அதிக நேரம் நீடித்திருப்பதை முக்கியமாக வைத்துக் கொள்கிறார்கள். வேறு சிலர், மிச்சம் இருக்கும் பொழுதை வைத்தே பண்டிகையை நிச்சயம் செய்து கொள்கிறார்கள்.

பஞ்சாங்கத்தைக் கணிப்பதிலும், திருக்கணிதம், வாக்கிய கணிதம் என்று பல்வேறு மார்க்கங்களைப் பின்பற்றுகிறோம். இந்தப் பழக்க வேறு பாடுகள்தாம் ஒரே பண்டிகை, வெவ்வேறு மாதங்களில் கொண்டாடப் படுவதற்குக் காரணம். இதில் எது சரி என்ற ப்ரச்னை வேண்டாம். அவரவர் சம்பிரதாயத்தில் கடைப்பிடித்து வரும் பழக்கங்களைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதே உசிதம்.

*கேள்வி : பகவான் ரமணர் ஆராதித்த அருணாசலேஸ்வரர் ஆலயத்துக்கு வந்து வழிபடுபவர்கள், கிரி ப்ரதக்ஷிணம் செய்கிறார்கள். இதன் முக்கியத்துவம் என்ன? மகான்களும், சித்தர்களும் வாழ்ந்த இடங்கள் இவ்வாறு பூஜைக்கு உரியதாகுமா?*

பதில் : எவ்வளவோ நதிகள் நமது நாட்டில் புண்ணிய நதிகளாகக் கருதப்பட்டாலும், அவற்றில் மிக உயர்ந்ததாக கங்கையைக் கருதுகிறோம். அதேபோல, எத்தனையோ கிரிகள் இருந்தாலும், இதுவே மிகவும் சிரேஷ்டமானதாக, புனிதமானதாகக் கருதப்படுகிறது. நாம் ஆத்ம ஸ்வரூபம் என்பது உண்மை என்றாலும், உடம்பையே தான், நாம் உண்மையான 'நான்' என்று கருதுகிறோம். இது அறியாமைதான். அதே போல, இது பார்வைக்கு கிரியாகத் தோன்றினாலும் இதுவே ப்ரத்யக்ஷமான சிவ ஸ்வரூபம் ஆகும். திருவண்ணாமலையில் உள்ள பசு, பக்ஷிகள் முதலாக எல்லா உயிர்களிடத்தும் சிவ சாந்நித்யம் உள்ளது. இந்த மலையில், வட ஆல விருட்சத்தின் கீழ், சாக்ஷாத் பரமேஸ்வரன் யோகீஸ்வரராக அமர்ந்திருக்கிறார். இன்னும் அநேக விசேஷங்களை உள்ளடக்கியதாக விளங்குகிறது இந்த மலை. அநேக சித்த புருஷர்கள், இன்றும், இங்கு வாசம் செய்கிறார்கள். தேவர்களும் இந்த கிரியைப் ப்ரதக்ஷிணம் செய்து வருகிறார்கள். இங்கு கிரி ப்ரதக்ஷிணம் செய்வது, சகல புருஷார்த்தங்களையும் கொடுக்க வல்லது. மகான்களும், சித்த புருஷர்களும் வாழ்ந்த இடம் என்பதால் இது தனிச்சிறப்பு கொண்டது. இந்த விதத்தில், அருணாசல க்ஷேத்திரமே தனி மகிமை வாய்ந்தது. இதன் பெருமை பல புராணங்களிலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

*கேள்வி : பெண்கள் மங்கலத்துக்கு காதுத் தோடும், கழுத்தில் மாங்கல்யமும் முக்கியம் என்று சொல்லுவதன் காரணம் என்ன? தாலியை ஓலையாகவும் மஞ்சளாகவும் கொண்டு அணிவது சரியாகுமா?*

பதில் : எப்படி நவரத்தினங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு விசேஷமான கிரகத்தின் பலனைக் கிரகித்துக் கொடுக்கும் சக்தி உள்ளதோ,

அதேபோல, நம்முடைய உடலில் சில அவயங்களில் அணியும் ஆபரணங்களுக்கும், சிலவித விசேஷமான பலன்களைக் கொடுக்கக் கூடிய சக்தி உள்ளது.

பெண்கள், காதிலும், கழுத்திலும் அணிந்து கொள்ளும் தாலியும், தாடங்கமும் கணவரின் ஆயுளை விருத்தி செய்யும் சக்தி கொண்டவை. இதைப்பற்றி ஆச்சாரியாள் 'செளந்தர்ய லஹரி'யில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இது எப்படி என்பதைப் புரிய வைக்க முடியாது. நம்மில் ஒவ்வொருவருக்குமே ஒவ்வொரு விதமான விசேஷ சக்தி இருக்கும். அது, அவர்களுக்கே கூடத் தெரியாமல் இருக்கலாம். ஒரு குழந்தை நீண்ட நேரம் அழுது கொண்டிருக்கிறது. ஆனால், ஒருவரைப் பார்த்ததும் அது சட்டென்று தனது அழுகையை நிறுத்திக் கொண்டு விடுகிறது. இது எப்படி? ஏதோ ஒரு சக்தி அவரிடம் இருப்பதை அந்தக் குழந்தை உணர்வது தான் அதற்குக் காரணம். அந்தச் சக்தி, அழும் குழந்தையைச் சமாதானப்படுத்தி விடுகிறது. இது என்ன, எப்படி? என்று விளக்க முடியாது. அதேபோல தான் இதுவும் என்று ஒப்பிடலாம்.

மஞ்சளினாலும், ஓலையாலும் தாராளமாகக் காதணிகளையும், தாலியையும் அணியலாம். பழங்காலத்தில் இப்படித்தான் அணிந்து வந்ததாக அறிகிறோம். காலத்தின் மாறுதலை ஒட்டியும், செல்வச் செழிப்பினாலும், ஸ்வர்ணம் ஒரு மங்களகரமான உலோகம் என்று கருதியும், பிற்காலத்தில் இவ்வாறு அணியும் பழக்கம் வந்திருக்கக்கூடும். இதன் பின்னணியில் உள்ள தத்துவ பூர்வமான உணர்வுதான் முக்கியமானது.

(தொடரும்)

---

<u>முன் அட்டைப்படம்</u> : செப்டம்பர் 23-ந் தேதியன்று நடந்த 'ச்ரவண தீப' வைபவத்தில் ஸ்ரீ குருஜி.

<u>பின் அட்டைப்படம்</u> : அதே வைபவத்தன்று நமது மிஷனின் வேத பாடசாலை வித்யார்த்திகளுடன் ஸ்ரீ குருஜி.

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 16

(பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் அருணாசல அக்ஷர மண மாலை - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸத்திலிருந்து சில பகுதிகள் - தொடர்ச்சி)

*ஈன்றிடும் அன்னையிற் பெரிதருள் புரிவோய்*
*இதுவோ உனதருள் அருணாசலா.* 6

உலகத்தில், நமக்குத் தெரிந்த விஷயத்தை சொல்லித்தான், தெரியாத விஷயத்தைப் புரிய வைக்க வேண்டியுள்ளது. தெய்வம் உண்டு என்பதற்கு, சாஸ்திரங்கள்தான் பிரமாணம். சாஸ்திரங்களை நமக்கு கொடுத்ததோ தெய்வத்தை நேரில் பார்த்த மஹரிஷிகள்.

உலக வழக்கில் சொல்லும் பொழுது, ஒருவரின் முகத்தை சந்திர பிம்பம் போன்ற வதனம் என்றும், நடையழகை அன்னம் போன்ற நடை என்றும், பற்களை முத்து முத்தான பற்கள் என்றும் வர்ணிப்பது உண்டு. உவமானமாக சொல்லப்படுகின்ற பொருள், உவமேய பொருளைக் காட்டிலும் சிரேஷ்டம் என்பது திண்ணம். அதாவது, முகம் அழகோ இல்லையோ, சந்திரன் அழகு என்பது திண்ணம். இவர்கள் நடை அழகோ இல்லையோ, அன்ன பக்ஷியின் நடை அழகு என்பது திண்ணம். உவமானத்தின் ச்ரேஷ்டம் சந்தேகமற விளங்குகின்றது.

உலகில், மாத்ரு வாத்ஸல்யம் தான், அதாவது தாயின் அன்புதான் மிகவும் தூய்மையானதாகவும், போற்றத் தக்கதுமாகவும் உள்ளது. அந்த தாயன்பு என்பது, மானிட வர்க்கங்களைக் காட்டிலும் பசு, பக்ஷிகளிடத்தில் இன்னும் தூய்மையாக உள்ளது. மனிதத் தாயாராவது, தன் குழந்தை பிற்காலத்தில் தனக்கு உதவவேண்டும் என்று ஒரு எதிர்பார்ப்பை வைத்திருக்கலாம். பறவைகள் முட்டையிட்டு, அடை காத்து குஞ்சு பொரித்து, அவைகளை இறக்கை முளைக்கும் வரையில் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வருகிறது. இறக்கை முளைத்தவுடன், குஞ்சுப் பறவை பறந்து விடுகிறது. பிறகு தாய்ப்பறவைக்கு அதனிடம் எந்த தொடர்பும் இல்லை. தேள், நண்டு இவைகள், தன்னுயிரை தியாகம் செய்து குஞ்சுகளை பொரிக்கின்றன. இவ்வாறு பசு, பக்ஷிகள் முதலியவற்றில் தாயன்பு காணப்படுகிறது.

நாம் இறைவனை அடைவதற்கு காமம், கோபம், பயம் இவைகள் மூன்றும் பெருந்தடைகளாக இருக்கிறது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. மாதாவிடத்தில் தான், ஒருவனுக்கு காமம், கோபம், பயம் இவை மூன்றும் ஏற்படுவதில்லை. ஆகவே தான், அநேக பக்தர்கள் இறைவனை மாத்ரு பாவத்தில் வழிபட்டிருக்கின்றனர். பகவானுடைய க்ருபையை நேரில் அனுபவித்த மஹாத்மாக்கள், சாமான்ய ஜனங்களுக்கு, இறைவனுடைய குழந்தைகளாகிய நம்மிடத்தில், இறைவன் கொண்டுள்ள கருணை எத்தகையது என்பதை எடுத்துரைக்க, தக்க ஒரு உவமானத்தைத் தேடுகின்றனர்.

*"ஆசையை அறுமின் ஆசையை அறுமின், ஈசனோடாயினும் ஆசையை அறுமின்"* என்கிறார் ஒரு பக்தர். அதாவது, பகவானிடத்தில் கொண்டுள்ள ஆசையைக் கூட விட்டு விடச் சொல்கிறார். இது என்ன நியாயம்? இப்படி கூறுகிறவர், ஒரு பக்தராக எப்படி இருக்க முடியும்?'' என்று வினா எழும்புகிறது. ஆனால், இதில் ஆழ்ந்த ஒரு கருத்து உள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

திருவண்ணாமலை சென்று கிரி ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும் என்று ஒரு ஆசை இருந்தால், அதை விட்டு விடுவது நியாயமா? உலக விஷயமான ஆசைகள் எல்லாம் போக வேண்டும் என்றால், பகவத் விஷயமான ஆசைகளை அல்லவோ வளர்த்துக் கொள்ள வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு பகவத் விஷயமான ஆசைகளில் நாட்டம் ஏற்படுகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு உலக விஷயங்களில் ஆசைகள் நம்மை விட்டு போகும். சில மஹாத்மாக்கள் 'காமம், காஞ்சனம், கீர்த்தி இவைகளை விடு' என்று உபதேசிக்கிறார்கள். இந்திரியக் கூட்டங்கள் இழுத்துச் செல்லும் ஒரு மனிதனைப் பார்த்து, இவைகளை எல்லாம் விடு என்றால், அவனால் எப்படி விட முடியும்? அதற்குப் பதிலாக, இறைவனுடைய சரணத்தையோ, குருநாதருடைய சரணத்தையோ பிடி என்று சொல்லலாம். நமக்கு, இன்னும் காமம், காஞ்சனம், கீர்த்தி இவைகளில் நாட்டம் இருக்குமானால் நாம் இறைவனின் சரணத்தை பற்றியுள்ளது போதாது, இன்னும் தீவிரமாகப் பற்ற வேண்டும் என்று தான் அர்த்தம். இப்படியிருக்க, 'இறைவனிடம் கூட ஆசையை விட்டுவிடு என்பது கூறுவது எப்படி சரியாகும்?' என்ற வினா எழும்புகிறது.

''இவரால் நாம் என்ன பிரயோஜனம் அடையலாம்?'' என்பதை உத்தேசித்து, நாம் ஒருவர் மீது வைக்கும் பிரியத்திற்கு ஆசை என்று

பெயர். ''நாம் ஒருவருக்கு எந்த விதத்தில் பிரயோஜனப்படலாம்'' என்று யோசித்து வைக்கப்படும் பிரியத்திற்கு, அன்பு என்று பெயர். ஆகவே, அந்த மஹா பக்தர் 'இறைவனிடம் ஆசை வைக்காதே, அன்பு வை' என்கிறார். அதாவது, ''பலனை உத்தேஸித்து காம்யார்த்தமான பக்தி செய்யாதே. நிஷ்காம்யமான ராக பக்தி செய்'' என்கிறார்.

''ஒரு குழந்தைக்கு இத்தனை மணிக்கு ஆகாரம் கொடுக்க வேண்டும்'' என்று இல்லாமல், குழந்தையின் முகம் வாடிய நேரமெல்லாம் பார்த்துப் பார்த்து பால் கொடுக்கிறாள் அன்னை. இதை, ஏதோ ஒரு கடமை என்று கருதாமல், அன்புடன் செய்கிறாள். சாதம் பிசைந்து, பல விளையாட்டுகள் காட்டி ஊட்டி விட்டு, குழந்தையின் வயிறு நிறைந்ததைப் பார்த்து, தான் மன நிறைவு அடைகிறாள். சூல் கொண்டது முதல், சரீரத்தில் பல உபாதைகளை ஏற்று தன்னுடைய ஆகாரத்தைக் குழந்தைக்கு பங்கிட்டுக் கொடுத்து குழந்தை பிறந்ததும் தன்னுடைய இரத்தத்தைப் பாலாகத் தந்து, அதன் மலத்தையும் மூத்திரத்தையும் கூட சுத்தம் செய்கிறாள்.

ஆகவே தான், இறைவனுடைய கருணையைக் கூறவந்த நாயன்மார், *''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து''* என்கிறார். ஆழ்வாரோ, *''பெற்ற தாயினும் ஆயினச் செய்யும், நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்''* என்று கூறுகிறார். நம் பகவனோ ''ஈன்றிடும் அன்னையிற் பெரிதருள் புரிவோய், இதுவோ உனதருள் அருணாசலா'' எனக் கூறுகிறார். இறைவனுடைய கருணை, தாயாருடைய கருணையைக் காட்டிலும் எந்த விதத்தில் ச்ரேஷ்டம்? என்று ஒரு கேள்வி. தாயாரோ, தன் குழந்தை சிரமப்படுவான் ஆகில், அதை நினைத்து மனதினால் கவலைப்படலாமே தவிர, அதை போக்குவதற்கான சக்தி அவளிடமில்லை. இறைவனோ அத்துயரையும் நீக்க வல்லவன். தாயாரோ ஞானக்கண் உடையவள் அல்ல. இறைவனோ முக்காலத்தையும் உணர்ந்தவன். தாயாரோ சரீரத்தைப் போஷிப்பதிலேயே கவனம் செலுத்தி, ஆன்மாவை வாட வைத்துவிடுகிறாள். இறைவனோ, உடலை சுருக்கி உள்ளொளி பெருக்க வைக்கிறான். ஆகவே, தன்னை ஆட்கொண்டு திருவண்ணாமலைக்கு அழைத்து இகபர சௌக்கியங்களையும் அளித்து, தன்னுடைய முழு பாரத்தையும் வகிக்கும் இறைவனின் கருணையை வியந்து, மேற்கூறியவாறு சொன்னதில் வியப்பொன்றுமில்லை.

(தொடரும்)

தொகுப்பு: **முரளிதரதாஸன்.**

# செய்திகள்

## அக்டோபர் 26-ந் தேதி முதல் நவம்பர் 1-ந் தேதி வரை.

*கும்பகோணம் ராஜா வேத பாடசாலையிலும், Oriental High School*லிலும் ஸ்ரீ குருஜி உபன்யாஸம் நிகழ்த்தினார்கள்.

❉❉❉

## நவம்பர் 10-ந் தேதி - *தீபாவளி - ஐப்பசி "சுவாதி"*

ஸ்ரீ குருஜியின் *ஜயந்தி மஹோத்ஸவம்* சென்னை *ப்ரேமிக பவனில்* மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

❉❉❉

## நவம்பர் 12-ந் தேதி - *அனுஷம்*

மாதாந்திர *'அத்வைத ஸித்தி - வாக்யார்த்த ஸதஸ்' ப்ரேமிக பவனில்* நடைபெற்றது.

❉❉❉

## நவம்பர் 22-ந் தேதி - கைசிக துவாதசி

*திருமழிசை* க்ஷேத்ரத்தில், நமது மிஷன் சார்பில் *ஸ்ரீ ஜகன்னாத பெருமாளுக்கு* விசேஷ திருமஞ்சனம், அலங்காரம் மற்றும் *ஆராதனை* நிகழ்த்தப்பட்டன.

❉❉❉

## நவம்பர் 25-ந் தேதி

சென்னை *ப்ரேமிக பவனில் ஸ்ரீ விஷ்ணு கார்த்திகை தீபம்* ஏற்றப்பட்டது.

❉❉❉

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

## டிசம்பர் 7-ந் தேதி முதல் 9-ந் தேதி வரை

சென்னை *மயிலாப்பூரிலுள்ள சமஸ்கிருத கல்லூரியில்* நம்முடைய மிஷன் சார்பில் *"ப்ரஸ்தான த்ரய பாராயண வித்வத் ஸம்மேளனம்"* நடைபெற உள்ளது.

❈ ❈ ❈

## டிசம்பர் 10-ந் தேதி - *'அனுஷம்'*

டிசம்பர் மாத *'அத்வைத ஸித்தி' வாக்யார்த்த ஸதஸ் ப்ரேமிக பவனில்* நடைபெறும்.

❈ ❈

## டிசம்பர் 16-ந் தேதி முதல்

*தனுர்மாத பூஜை* ஆரம்பம்.

❈ ❈ ❈

## டிசம்பர் 20-ந் தேதி - *வைகுண்ட ஏகாதசி*

*மதுரபுரி ஆஸ்ரமத்தில்* விடியற்காலை *பரமபத வாசல் திறப்பு* - காலை 6 முதல் மாலை 6 மணி வரை *"த்வாதசாக்ஷரி" அகண்ட ஜபம்* - இரவு *திவ்ய நாம பஜனை.*

❈ ❈ ❈

மங்களானி பவந்து

மதுரமுரளி

Registered as Newspaper in India

R. No. 62828/95 | Regd. No. TN/MS/(S)/714

Single Copy Rs. 5/- | Annual Subs. Rs. 60/-

வேணு : 2 | டிசம்பர் 1996 | கானம் : 5





Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar